**KALAM – International Journal**
**Faculty of Arts and Culture,**
**South Eastern University of Sri Lanka.**
**14(1), 2021**

# ஆற்றுப்படுத்தலில் பள்ளிவாசல் இமாம்களின் வகிபாகம்

**Abdullah M.M.A.** [1] **& Mazahir S.M.M.** [2]
[1,2]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka

Correspondence: [1]abdullahmma416@gmail.com, [2]mazahirsmm@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

முஸ்லிம்களின் ஆன்மீக, சமூக, பொருளாதார, கல்வி போன்ற பல்வேறு துறைசார் தேவைகளை நிறைவேற்றும் மத்திய நிலையமாக பள்ளிவாசல் காணப்படுகிறது. முஸ்லிம்களின் முக்கிய ஆன்மீகக் கடமைகளுள் ஒன்றான தொழுகையை தலைமைதாங்கி நிறைவேற்றுவதை தமது பாரம்பரியக் கடமையாக நிறைவேற்றி வரும் இமாம்கள், தாம் வாழும் பிரதேச முஸ்லிம்களின் பல்துறைசார் தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமானதாகும். இவற்றுள் அச்சமூக மக்கள் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான வழிகாட்டல்களை வழங்குவது மிக முக்கியமான ஒன்றாகும். அந்தவகையில் முஸ்லிம்களின் உளவியல்சார் பிரச்சினைகளை நெறிப்படுத்துவதில் இமாம்களின் வகிபாகத்தைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. முன்னைய இலக்கியங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்காக தலைப்புடன் தொடர்புபட்ட ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், இணையத்தள ஆக்கங்கள் என்பன மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, விபரண ரீதியாக முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் பல்துறைசார் தேவைகள் தொடர்பில் அக்கறையுடன் செயற்பட வேண்டிய இமாம்கள், அவர்கள் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான சவால்களுக்குத் தேவையான வினைத்திறனான வழிகாட்டல்களை வழங்குவது அவர்களின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகும் என்பதே இவ்வாய்வின் பிரதான கண்டறிதலாகும். பல்வேறு நிலைகளின் போது முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான சவால்களை வெற்றிகரமாக முறியடிப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை சமூக அங்கத்தவர்களுக்கு வழங்குவதில் இமாம்களின் வகிபாகத்தின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இவ்வாய்வு உறுதுணையாக அமையவல்லதாகும்.

**திறவுச் சொற்கள்:** இமாம்கள், முஸ்லிம் ஆன்மீகத் தலைவர்கள், உளவளத்துணை, ஆற்றுப்படுத்தல், பள்ளிவாசல், இஸ்லாம்.

## *1.* ஆய்வுப் பின்னணி

நவீன உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் துறைகளுள் உளவளத்துணை மிக முக்கியமான ஒன்றாகும் (McLeod, 2009). நாளாந்த வாழ்வில் மனிதன் முகங்கொடுக்கும் எதிர்பாராத விடயங்களினால் ஏற்படும் பல்வேறுபட்ட உளப்பிரச்சினைகளை முகங்கொடுக்க இயலுமான வகையில் மனித ஆளுமையினை விருத்தி செய்து, குழப்ப நிலையிலான உளநிலையினை நடுநிலைப்படுத்தி, தேவையானபோது உளச் சிகிச்சையினைப் பெற்றுக்கொடுப்பதற்கான விஞ்ஞான ரீதியில் அணுகும் உளவியலை அடிப்படையாகக் கொண்ட முறைப்படுத்தப்பட்ட தொழில் வாண்மைமிக்க சமூக அபிவிருத்தித் துறை அல்லது குழப்பமான மனநிலையிலிருக்கும் ஒருவரை சாதாரண மன நிலைக்கு கொண்டு வருவதற்காக வழங்கப்படும் உதவியே உளவளத்துணையாகும் என Abdeen (2012) அதனை வரையறை செய்கிறார்.

மனித இனம் ஆரம்பமான நாளிலிருந்தே வளர்ந்து வந்த உளவளத்துணையில் பெற்றோர், ஆசிரியர், நண்பர், முதியோர் போன்ற பலர் ஆலோசகர்களாகவும் ஆற்றுப்படுத்துனராகவும் செயற்பட்டு வந்துள்ளனர். 19 ஆம் நூறாண்டில் மனித ஆளுமையில் ஏற்பட்ட ஆளமான

பாதிப்புக்களின் விளைவுகள் தொடர்பில் இடம்பெற்ற ஆய்வுகளின் விளைவாக தனியான துறையாக வளர்ச்சியடைய ஆரம்பித்த உளவளத்துணைக்கு விஞ்ஞான பூர்வமாக அடித்தளமிட்டவர் சிக்மன்ட் புரொய்டு (Sigmund Freud) ஆவார் (Damien, 2005).

பொதுவாக ஒருவருக்கு உளவியல் சார்ந்து சிகிச்சையளிக்கும் போது அவருக்கு தனது சமயம் முக்கியமானதானக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவரது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைப்பதற்கு அவரது சமய நம்பிக்கைகளும் போதனைகளும் பெரிதும் துணை புரியும் (Haque & Kamil, 2012).

உலகின் மொத்த சனத்தொகையில் 23% ஆனோர் முஸ்லிம்களாவர். அத்துடன் உலக நாடுகளில் ஏறத்தாள 50 நாடுகள் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகளாகும். எவ்வகையான சமூகத்தைச் சார்ந்திருப்பினும் முஸ்லிம்கள் உள மற்றும் உணர்வு சார்ந்த பல்வேறு சுகாதாரம் சார் சவால்களை எதிர்கொள்கின்றனர் (Saleem, 2015).

இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான சீரிய வழிகாட்டல்களை வழங்கும் மார்க்கமாகும் (Shah et al., 2016). உலகளாவிய ரீதியாக முஸ்லிம்கள் தமது தொழுகையை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் வேறு பல சமய நடவடிக்கைகளுக்காகவும் மஸ்ஜிதுக்கு சமூகமளிக்கின்றனர் (Abu- Ras et al., 2008). நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஆன்மீக விடயங்கள் மாத்திரமன்றி கல்வி, சமூக, அரசியல், பொருளாதாரம் போன்ற முஸ்லிம்களின் பல்துறைசார் தேவைகளையும் கவனத்தில் கொண்டு அக்கறையுடன் செயற்படும் மத்திய நிலையமாக பள்ளிவாயல் செயற்பட்டு வந்துள்ளது (Muhammad, 1996).

இவற்றுள் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் உள ரீதியான சவால்கள் மிக முக்கியமானவையாகும். Ali et al (2005) அமெரிக்காவின் பள்ளிவாயல்களை மையப்படுத்தி மேற்கொண்ட ஆய்வில் அவற்றின் இமாம்கள் தம்மை நாடி வருவோர் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான உளவளத்துணை செயற்பாடுகளை மேற்கொண்ட போதிலும் தேவையான பயிற்சியின்மை, உதவியாளர்களின்மை, பள்ளிவாசலில் வளப்பற்றாக்குறை நிலவுகின்றமை போன்றவற்றால் திருப்தியான முறையில் அதனை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றமை கண்டறியப்பட்டது.

எனவே, இவ்வாய்வு உளவளத்துணையில் இமாம்களின் வகிபாகம் தொடர்பில் பரிசீலித்து, வினைத்திறனான உளவளத்துணைச் செயற்பாட்டை அவர்கள் மேற்கொள்வதற்கான வழிகாட்டல்களை விபரிக்க முனைகிறது.

## 2. ஆய்வு நோக்கம்

முஸ்லிம்களின் உளவியல்சார் பிரச்சினைகளை நெறிப்படுத்துவதில் பள்ளிவாசல் இமாம்களின் வகிபாகத்தை பகுப்பாய்வுக்குட்படுத்துவதை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3. ஆய்வு முறையியல்

முன்னைய இலக்கியங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்காக தலைப்புடன் தொடர்புபட்ட ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளத் தகவல்கள் என்பன மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, விபரண ரீதியாக முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

### *4. இலக்கிய மீளாய்வு*

கடந்தகால இலக்கியங்களை மீளாய்வுக்கு உட்படுத்தியபோது ஆய்வுத் தலைப்பு தொடர்பில் பல்வேறு ஆக்கங்கள் காணப்படுவதை அறிய முடிந்தது.

The Imam's Role in Mental Health Promotion: A Study at 22 Mosques in New York City's Muslim Community எனும் தலைப்பில் அபூ ராஸ் மற்றும் கீத் என்போரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அமெரிக்க நிவ்யோர்க் நகரின் 22 பள்ளிவாயல்களில் கடமையாற்றும் இமாம்களின் உளவளத்துணைப் பங்களிப்புகள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்து. அச்சமூகத்தில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பல்வேறு உளப்பிரச்சினைகளின் போது அவர்கள் பள்ளிவாசல் இமாம்களை நாடி வருகின்ற போதும் போதிய அறிவின்மை போன்ற சில முக்கிய காரணிகளின் விளைவாக அவர்கள் திருப்தியான முறையில் உளவளத்துணைச் செயன்முறையை மேற்கொள்வதில்லை என்பதே இவ்வாய்வின் பிரதான கண்டறிதலாகும்.

The Imam's Role in Meeting the Counseling Needs of Muslim Communities in the United States எனும் தலைப்பில் அலி, மில்ஸ்டைன் மற்றும் மர்ஸுக் என்போரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அமெரிக்க சிறுபான்மை முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் உளவியல் சார் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இமாம்களின் பங்களிப்பு தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. பள்ளிவாசல் இமாம்கள் போதிய உளவளத்துணைப் பயிற்சியைப் பெற்றிருக்காமலிருப்பினும் பலர் அவர்களிடம் ஆலோசனைகளைப் பெறுவதற்கு முனைகின்றமையினால் தொழில்முறை உளவளத்துணையாளர்களின் உதவியியைப் பெற்று, சமூக அங்கத்தவர்களின் உளவியல் தேவைகளை பூர்த்தி செய்வது அவசியமானதாகும் என்பதே இவ்வாய்வின் முடிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

The role of the mosque and its relevance to social work எனும் தலைப்பில் அல்கெரீனாவி என்பவரால் மேற்கொள்ளபட்டிருந்த ஆய்வில் குழுக்கள், குடும்பங்கள், தனி மனிதர்கள் போன்ற பல்வேறு தரப்பினருக்கிடையில் தோன்றும் பிணக்குகளைத் தீர்ப்பதில் பள்ளிவாயல் மற்றும் உளவளத்துணையாளர்களின் வகிபாகம் எவ்வாறு அமையப்பெற வேண்டும் என்பது தொடர்பில் ஆராயப்பட்டிருந்து.

Religion and mental health: The case of American Muslims எனும் தலைப்பில் ஹக் என்பவரால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வில் அமெரிக்க சிறுபான்மை முஸ்லிம்கள் சமயத்துடனான தொடர்பைப் பேணுகின்ற போதிலும் அவர்கள் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான பிரச்சினைகளின் போது இஸ்லாமியப் போதனைகளைத் தழுவிய உளவியல் வழிகாட்டல்கள் மிகக் குறைவாகவே அவர்களுக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடப்பட்டிருந்து. அத்துடன் உளச் சுகாதாரம் தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களும் அவ்வாய்வில் விபரிக்கப்படடிருந்தது.
The Concept of Effective Islamic Spiritual Care எனும் தலைப்பில் இஸ்கன்டரோவா என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தற்காலத்தில் பிரபலம் பெற்றுவரும் “இஸ்லாமிய ஆன்மீக அக்கறை” எனும் கோட்பாட்டின் அவசியம் மற்றும் அதன் பெறுமானம் என்பவை இஸ்லாமிய மூல ஆவணங்களான அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவின் துணைகொண்டு விபரிக்கப்பட்டிருந்தன.

### *5. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்*

#### ***இமாம்கள்***

முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவர்களே இமாம்கள் எனப்படுகின்றனர். இவர்களின் மூலமே முஸ்லிம்களின் தொழுகை பள்ளிவாயல்களில் நடாத்தப்படுகிறது (Abu- Ras et al., 2008). முஸ்லிம்களின் ஆன்மீக மற்றும் சமூக வாழ்வில் இமாமின் வகிபாகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவர் சமூகத்தில் மதிப்பும் நாணயமும் மிக்கவராகவும் முன்மாதிரியானவராகவும் கருதப்படுகிறார் (Siddiqui, 2004). அத்துடன் அவர் முஸ்லிம் சமூகத்தில் நல்லொழுக்கமுள்ளவராகவும் இஸ்லாத்தின் சட்டதிட்டங்களைப் பற்றிய ஆழ்ந்த புலமை

உள்ளவராகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது (Al-Hibry, 1995). தொழுகை, மார்க்க உரைகள், சமய வைபவங்களை நடாத்தல் மற்றும் சமய, ஆன்மீக வழிகாட்டல்களை வழங்கல் போன்றவை அவரது பாரம்பரியக் கடமைகளாக நோக்கப்படுகின்றன (Haddad & Lummis, 1987).

முஸ்லிம் சமூகங்களில் இப்பதவிக்கு தகுதி பெறுவதற்கான பல்வேறு தகைமைகள் எதிர்ப்பார்க்கப்படுவதோடு தொடர்ந்தும் வளர்ச்சியுறும் பாத்திரமாக அப்பதவி கருதப்படுவதனால் மார்க்க அறிவு தவிர்ந்த ஏனைய விடயங்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பது இமாம் என்ற பதவிக்கு மிகவும் அத்தியவசியமானதாகும். அவர் ஆன்மீக வழிகாட்டல்கள் மற்றும் போதனைகளை வழங்குவது மாத்திரமன்றி ஆலோசனைகளை வழங்கல், மத்தியஸ்தம் வகித்தல், பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் போன்ற பல்வேறு விடயங்களிலும் போதிய பங்களிப்புக்களை வழங்க வேண்டும். அவர் தனது சமூகத்தின் தேவைகளையும் அபிலாஷைகளையும் கண்டறிந்து அச்சமூக அங்கத்தவர்களின் உணர்வுகளை கவனத்தில் கொண்டு செயற்படுவது அவர்களின் உள நிவாரணத்துக்கான தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்கு மிகவும் அவசியமானதாகும். எனவே, அவர் சமய மற்றும் ஏனைய விவகாரங்களில் சமூகத்தின் அங்கத்தவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும். இவ்வாறான பன்முக வகிபாகங்களுடன் தொடர்புபட்ட பண்பாடு, சட்ட, தொழில்சார்ந்த பல்வேறு பொறுப்புக்களை அவர் கொண்டுள்ளார் (Siddiqui, 2004).

**சமய நம்பிக்கையும் உளச்சுகாதாரமும்**

Matthews et al. (1998), Hummer et al. (1999) மற்றும் Sulmasy (1999) ஆகியோர் சமய நம்பிக்கைகள் ஒரு மனிதனின் ஆரோக்கியத்தில் குறிப்பிடத்தக்களவு தாக்கம் செலுத்துவதையும் அவனது உளச்சுகாதாரத்திற்கும் சமயத்துக்கும் மத்தியில் நெருங்கிய தொடர்பு காணப்படுவதையும் தமது ஆய்வுகளினூடாகக் கண்டறிந்தனர்.

அதேபோல் மத நம்பிக்கைகளும் நடைமுறைகளும் மனித வாழ்வில் ஏற்படும் பாதக அனுபவங்களை எதிர்கொள்வதற்கான ஊக்கியாக செயற்படும் அதேவேளை நிர்க்கதி நிலைகளை வெற்றிகரமாக முறியடிப்பதற்கான சிறந்த வழிமுறையாகவும் அவை திகழ்வதாக Tedeschi (1999) குறிப்பிடுகிறார்.

**இஸ்லாமும் உளச்சுகாதாரமும்**

அந்தவகையில் இஸ்லாமிய நோக்கில் ஆரோக்கியமான உளச்சுகாதார மேம்பாடு என்பது ஆன்மீக சுயம் (spiritual self) மற்றும் உடலியல் சுயம் (physical self) ஆகியவற்றுக்கிடையிலான போராட்டத்தை விளங்கிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. ஆன்மீக சுயம் மனித குறைபாடுகள், உணர்வுசார் பலவீனங்கள், மறைவான ஆற்றல்கள் போன்றவற்றை வெளிப்படுத்த முயலும் அதேவேளை உடல்சார் சுயம் கொடுமை, பேராசை, கடின சுபாவம் போன்றவற்றை மனிதனுக்குள் தூண்டுகிறது. எனவே, ஒரு மனிதனின் ஆன்மீகப் பகுதி தன்னலமற்றதும் நல்ல விடயங்களில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தை உண்டுபண்ணக் கூடியதுமாகும். அதேபோல் மனிதனின் உடலியல் பகுதி சுயநலமிக்கதும் ஆக்கிரமிப்பு சிந்தனையை கொண்டதுமாகும். ஆகவே, உள்ளச்சம் (தக்வா), பயனுள்ள விடயங்களில் ஈடுபடுதல் போன்றவற்றினூடாக முஸ்லிம்கள் தமது உள்ளக முரண்பாடுகளை தீர்த்துக்கொள்ள வேண்டும். இம்முயற்சி வெற்றியளிக்கும் போது நிம்மதியான ஆக்கபூர்வமிக்க வாழ்வு அவர்களுக்கு கிடைக்கப்பெறுவதற்கான வாய்ப்பு உருவாகிறது. மனிதர்கள் என்ற வகையில் பல்வேறு உளம்சார் பலவீனங்கள் உள்ளபோதும் அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்வது ஒவ்வொரு முஸ்லிமினதும் பொறுப்பாகும் (Abu- Ras et al., 2008).

**இமாம்களும் உளச் சுகாதாரமும்**

பொதுவாக ஆன்மீக ஈடுபாடு கொண்டோர் தமக்கு ஏற்படும் நிர்க்கதி நிலைகளின் போது அவற்றுக்கான தீர்வுகளைப் பெற சமயத் தலைவர்கள் தகுதியானவர்களா என்பதைப் பாராமல் அவர்களை நாடுவது இயல்பானதாகும் (Al-Krenawi, 2016).

தனது சமூக அங்கத்தவர்களுடன் பிணைந்து வாழும் ஒரு சமயத் தலைவர் அவர்கள் எதிர்நோக்கும் உளச் சுகாதார ரீதியான சவால்களை எதிர்கொள்வதில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புக்களை வழங்குகிறார் என பல்வேறு ஆய்வு முடிவுகள் உறுதிப்படுத்தியுள்ளன (Leavey et al., 2007; Taylor et al., 2000).

அந்தவகையில் Ali et al. (2005) குறிப்பிடுவதற்கிணங்க முஸ்லிம்களும் தமது உளவியல் சார் பிரச்சினைகளுக்கான பொருத்தமான தீர்வுகளைப் பெற பள்ளிவாயல் இமாம்களை நாடிச் செல்கின்றனர். எனவே, இமாம்கள் பல முஸ்லிம் சமூகங்களில் மிகவும் மதிப்புமிக்கவர்களாக நோக்கப்படும் அதேவேளை சுகாதார விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் சமூக அங்கத்தவர்களுக்குத் தேவையான போதிய உளவளத்துணை வழிகாட்டல்களை வழங்கல் போன்ற விடயங்களில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புக்களை ஆற்றுகின்றனர் (Abu- Ras et al., 2008).

**உளவளத்துணையில் இமாம்களின் வகிபாகம்**

Bate மற்றும் Robert (2002) ஆகியோர் மேற்கொண்ட ஆய்வில் இமாம்கள் தமது சமயம் சார்ந்த கடமைகளை மாத்திரமன்றி உளவளத்துணைக்குத் தேவையான போதிய அறிவோ தகைமையோ இல்லாத போதிலும் சமூக அங்கத்தவர்களுக்குத் தேவையான உளவியல் ரீதியான வழிகாட்டல்களையும் வழங்குகின்றனர் என்ற வகையில் முஸ்லிம் சமூகத்தில் அவர்கள் மிக முக்கிய அங்கத்தவர்களாகத் திகழ்கின்றனர் என்பதைக் கண்டறிந்துள்ளனர்.

இவ்வாய்வு முடிவு உளவளத்துணைச் செயற்பாட்டில் இமாம்களின் வகிபாகத்தை மிகத் தெளிவாக உணர்த்தும் வகையில் அமையப்பெற்றுள்ளது. எனினும் அச்செயற்பாட்டில் அவர்கள் போதிய தகைமையுடன் ஈடுபடுவதில்லை எனவும் இவ்வாய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, உளச் சுகாதாரம் சார்ந்த அடிப்படை விடயங்கள் தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் போதிய பயிற்சி அவர்களுக்கு வழங்கப்படுவதனூடாக அவர்களின் துறைசார் திறன் விருத்தியில் பல்வேறு சாதகமான முன்னேற்றங்களை ஏற்படுத்த முடிவதோடு வினைத்திறன் மிக்க உளவளத்துணைச் செயற்பாட்டிலும் அவர்கள் ஈடுபடுவதனூடாக சமூகம் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான சவால்களை வெற்றிகொள்வதற்கான வழிகாட்டல்களையும் வழங்குவதற்கான சிறந்த வாய்ப்பாக அது அமையவல்லதாகும்.

முஸ்லிம் சமூகத்தில் வெள்ளிக் கிழமை பிரசங்கம் உட்பட ஏனைய பிரசங்கங்கள் தகவல் பரிமாற்றத்துக்கான மிக முக்கிய ஊடகங்களாகும். எனவே, இமாம்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உள விவகாரங்கள் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குவதோடு சமூக அங்கத்தவர்கள் எதிர்கொள்ளும் உள நெருக்கடிகளுக்கான தீர்வுகளையும் தேவைக்கேற்ப வழங்குவதனூடாகவும் அவர்களின் பல்வேறு பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான ஆற்றலை அதிகரிக்க முடியும் (Shah & McGuinness, 2011).

அதேபோல் முஸ்லிம் சமூகத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் உளவளத்துணை தொடர்பான நூல்களும் சிறுகையேடுகளும் ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு பள்ளிவாயல்களில் பொது இடங்களில் வாசிப்புக்காக வைக்கப்படுவதனூடாகவும் குறிப்பிடத்தக்களவு சாதகமான மாற்றங்களை சமூக அங்கத்தவர்களுக்கு மத்தியில் ஏற்படுத்த முடியும். அத்துடன் பெருநாள், ஜும்ஆ தொழுகை போன்ற முஸ்லிம்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான ஒன்றுகூடல்கள் இடம்பெறும் பட்சத்தில் உளவளத்துணையுடன் தொடர்பான பிரத்தியேக நிகழ்வுகள் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு மேற்கொள்ளப்படுவதனூடாகவும் சமூக அங்கத்தவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்படுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுகிறது.

மேலும் பள்ளிவாயலில் அல்லது வேறு ஏதேனும் இடங்களில் முஸ்லிம் குடும்பங்களுக்கான அதிலும் குறிப்பாக பெண்களுக்கான தனியான உளவளத்துணை வழிகாட்டல்கள் வழங்கப்படுவதனூடாகவும் உளவியல் ரீதியான பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஓரளவுக்கு முன்வைக்க முடியும்.

**இஸ்லாமிய ஆன்மீக அக்கறை மற்றும் உளவளத்துணை எண்ணக்கரு**

நவீன உளவளத்துணைத் துறையில் இஸ்லாமிய ஆன்மீக அக்கறை மற்றும் உளவளத்துணை எனும் எண்ணக்கரு (The concept of Islamic spiritual care and counselling) பரவலாக முன்வைக்கப்படுகிறது (Isgandarova, 2011).

இஸ்லாமிய வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு இமாம்கள் போன்ற சமயத் தலைவர்கள் மூலம் சமூக அங்கத்தவர்களுக்காக வழங்கப்படும் ஆலோசனை மற்றும் ஆற்றுப்படுத்தல் செயற்பாடே இஸ்லாமிய ஆன்மீக அக்கறை மற்றும் உளவளத்துணை என அழைக்கப்படுகிறது. அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவில் காணப்படும் நம்பிக்கை மற்றும் சமூகக் கற்கைகள் தொடர்பான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இக்கலை ஒரு தனியான கலையாக இருப்பினும் இஸ்லாமியக் கல்வி, உரைகள், நம்பிக்கை, ஒழுக்கவியல் போன்றவற்றுடன் அது நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது (Isgandarova, 2014).

முஸ்லிம்களின் இறை நம்பிக்கையை அதிகரித்து அவர்கள் எதிர்நோக்கும் துக்கம், இழப்பு, வன்முறை போன்ற தனிநபர், பிறருடன் தொடர்புபட்ட மற்றும் பொது சவால்களை எதிர்கொள்வதற்காக அவர்களை தயார்படுத்தும் நோக்கில் பல வழிகளில் இது மேற்கொள்ளப்படுகிறது. வலியை குறைத்தல், ஸ்திரப்படுத்தல், வழிகாட்டல் மற்றும் இணக்கத்தை ஏற்படுத்தல் போன்றவையே அதன் முக்கிய இலக்குகளாகும். இஸ்லாமிய ஆன்மீக அக்கறை மற்றும் உளவளத்துணை என்பது சாதாரண ஆன்மீக ரீதியான பொறுப்பை விட அதிகமானதாகும். இது பள்ளிவாயல் மற்றும் ஏனைய இஸ்லாமிய நிறுவனங்களின் கடமையாக இருப்பினும் சமூகம் மற்றும் ஏனைய ஒவ்வொரு தனி முஸ்லிமும் தமது சமூக அங்கத்தவர்களின் ஆன்மீக ஆரோக்கியத்துக்குப் பொறுப்பானவராவார். இதனூடாக பாதிக்கப்பட்ட நபரின் தனிமை நீங்கி, அவருக்குள் தோழமை உணர்வு ஏற்படுகிறது. எவ்வாறாயினும் வளர்ச்சிக் கோட்பாடு (Developmental Theory), துக்கக் கோட்பாடு (Grief Theory), பாலினக் கற்கைகள் (Gender Studies) போன்ற சமூகவியல் கற்கைகளுடன் தொடர்பான பல்வேறு வளங்களும் இம்முறையினூடாக உளவளத்துணையை மேற்கொள்வதில் தாக்கம் செலுத்துகின்றன (Isgandarova, 2013).

மனிதனின் உள்ளார்ந்த பலவீனங்களை தடுக்கும் வல்லமை கொண்ட உளவியல் நோய்களுக்கான சிகிச்சையின் போது இஸ்லாமிய நோக்கில் அவற்றின் இயல்பை புரிந்து கொள்வது மிக முக்கியமான ஒன்றாகும். பாரம்பரிய இஸ்லாமியப் போதனைகளின்படி உளவியல் நோய்கள் இறைவனுடனான உறவில் ஏற்படும் பற்றாக்குறை அல்லது இறைவனின் தண்டனை அல்லது இறைவனின் நாட்டத்தின் விளைவாகும். (Al-Krenawi, 1995).

உளவியல் நோய் என்பது மனிதனுக்கு ஏற்படும் துன்பத்தின் ஒரு பகுதியாகும். பொறுமையுடனும் பிரார்த்தனையுடனும் குறித்த சோதனை சகித்துக்கொள்ளப்படுமாயின் அதற்கு இரட்டிப்பான வெகுமதி உண்டு. உடலியல் அல்லது உளவியல் ரீதியான அனைத்து நோய்களும் மனிதனின் இறைநம்பிக்கை, உள்ளச்சம், நாணயம் போன்றவற்றை சோதிக்கும் விதமாக இறைவனால் வழங்கப்படும் சோதனைகளாகும். தொழுகை, நோன்பு, பாவமன்னிப்பு, குர்ஆன் ஓதல் மற்றும் இறைவனை ஞாபகமூட்டல் (திக்ர்) போன்ற வழிபாடுகளில் ஈடுபடுவதனூடாக இத்தகைய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு, சுய வலிமையை மேம்படுத்தி, வலிகளை குறைத்துக் கொள்வதற்கான படிமுறைகளாகும் என இஸ்லாம் குறிப்பிடுகிறது (Abu-Ras et al., 2008).

இஸ்லாமிய நோக்கில் ஆன்மீக மற்றும் உளவியல் முன்னேற்றம் என்பது மனிதன் தனது மனோ இச்சையை பின்பற்றும் (அந்நப்ஸ் அல்அம்மாரா) நிலையிலிருந்து ஆரம்பித்து உள அமைதி

மற்றும் தன்னம்பிக்கை (அந்நப்ஸ் அல்முத்மஇன்னா) நோக்கி முன்னேறிச் செல்லும் தொடர் செயன்முறையாகும். இது ஒரு மனிதன் தன் மனதுக்குள் ஏற்படும் தன்னைப் பற்றிய சந்தேகம், குற்ற உணர்வு மற்றும் தனது பலம்-பலவீனங்களை ஏற்றுக் கொள்ளும் நிலை போன்ற பல்வேறு நிலைகளைக் கடந்து முழுமையான உள அமைதியை நோக்கி நகரும் நீண்ட பிரயாணமாகும். இச்சிகிச்சை முறை “தஸ்கியதுந் நப்ஸ்” என அழைக்கப்படுகிறது (Mohit, 2001). உளவளத்துணையின் முக்கிய சிகிச்சை முறைகளான புலனுணர்வு, நடத்தை மற்றும் மனோதத்துவ சிகிச்சை முறைகளின் (Cognitive behavioral and Psychodynamic therapy) கூறுகளை இச்செயன்முறைகள் பெரிதும் ஒத்ததாக அமைந்துள்ளன. இஸ்லாமிய உளவியல் சிகிச்சையின் இக்கூறுகள் உள நெருக்கடிகளில் உள்ள இறைவழிபாட்டில் ஈடுபாடு கொண்டோருக்கு இமாம்களின் மூலம் வெற்றிகரமாக பயன்படுத்தப்படுவதனூடாகவும் அவர்களுக்குத் தேவையான உளவளத்துணை ஆலோசனைகள் வழங்கப்பட முடியும் (Abu-Ras et al., 2008).

எனவே, இக்கோட்பாடு தொடர்பிலான வழிப்புணர்வு மற்றும் அவற்றின் நடைமுறை அமைப்பு தொடர்பில் தேவையான வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் பயிற்சிகளும் பள்ளிவாசல் இமாம்களுக்கு வழங்கப்படுவனூடாக அவற்றை நடைமுறைப்படுத்தி சமூக அங்கத்தவர்களின் உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கான தேவையான தீர்வுகளை வழங்கும் ஆற்றல் மற்றும் தகைமை கொண்டவர்களாக அவர்களை மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது காலத்தின் தேவையாகும்.

**இமாம்களும் தொழில்முறை உளவளத்துணையாளர்களும்**

ஆன்மீக வழிகாட்டல்களை வழங்கும் பல இமாம்கள் ஆன்மீக ரீதியான பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான இயலுமையை பெற்றுள்ள போதும் சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் சார்ந்த பிரச்சினைகளை கையாள்வதற்கான தகுதி அற்றவர்களாகவே உள்ளனர் (Haque, 2004).

இமாம்கள் தாம் வாழும் சமூக அங்கத்தவர்களுக்கான சாதாரண உளவளத்துணையாளர்களாக சேவையாற்றி அவர்களின் உளவியல் ரீதியான பல்வேறு பிரச்சினைககளைத் தீர்ப்பதற்கான முடியுமான பங்களிப்புக்களை வழங்குகின்ற போதும் முஸ்லிம்களின் சுகாதாரம் மற்றும் சமூகம் சார்ந்த சேவைகளுக்கான கட்டமைப்பில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்படுவது காலத்தின் தேவையாகும். அத்துடன் போதிய பயிற்சியின்றி உளவளத்துணைச் செயற்பாடுகளில் ஈடுபடும் இமாம்களுக்கு தொழில்முறை உளவளத்துணையாளர்களின் ஆதரவு மேலும் கிடைக்கப்பெறுவதனூடாக தாம் சார்ந்திருக்கும் சமூக அங்கத்தவர்களின் உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கான வினைத்திறனான தீர்வுகளை தேவைக்கேற்ப முன்வைக்க முடியும். தனிநபர் உள ஆரோக்கியம் மற்றும் முஸ்லிம் குடும்பங்களின் பாதுகாப்பு விடயங்களில் இமாம்கள் காத்திரமான பங்களிப்புக்களை ஆற்றுகின்றனர். எனவே, தமது சமூக அங்கத்தவர்களின் உளவியல் தேவைகளை நிறைவு செய்வதில் அவர்கள் வகிக்கும் முக்கிய பாத்திரத்தில் தொழில்முறை உளவளத்துணையாளர்களின் உதவியும் கிடைக்கப் பெறும் பட்சத்தில் பல்வேறு சாதகமான சேவைகளை அவர்கள் தமது சமூகத்துக்கு வழங்க முடியும் என Naseredden (2015) இவ்விடயத்துக்கான தீர்வை தனது ஆய்வு முடிவுரையில் பரிந்துரைக்கின்றார்.

***6. முடிவுரை***

முஸ்லிம் சமூகத்தின் பல்துறைசார் பங்களிப்புக்களை வழங்குவோரில் இமாம்கள் மிக முக்கியமானவர்களாவர். சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுள் உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கான ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் மிக முக்கியமானவையாகும். ஒரு மனிதன் கொண்டுள்ள சமய நம்பிக்கைகள் அவன் எதிர்நோக்கும் உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைப்பதில் தாக்கம் செலுத்துகிறது என்ற வகையில் இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவின் துணை கொண்டு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் முன்வைக்கப்படுவதே

இவ்விடயத்தில் இமாம்கள் மூலம் வழங்கப்படும் காத்திரமான பங்களிப்பாகும். இம்முறையில் உளவளத்துணைச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அவர்கள் வெள்ளிக்கிழமை உரை, பொதுவான உரைகள், தனிநபர் அறிவுரை, உளவத்துணை நிகழ்வுகளை நடாத்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்கான பல்வேறு சந்தர்ப்பங்களை தேவைக்கேற்ப வினைத்திறனாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் உளவளத்துணைச் செயற்பாட்டில் ஆன்மீக விடயங்கள் மற்றும் மார்க்க விடயங்களுடன் மாத்திரம் நின்றுவிடாமல் தாம் சார்ந்திருக்கும் சமூகத்தின் வழக்கங்கள், இயல்புகள், சூழ்நிலைகள், தேவைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துவதுடன் நவீன உளவளத்துணைத் துறை சார்ந்த விடயங்களை தேவையான வகையில் கற்று போதிய பயிற்சிகள் பெறுவதனூடாகவுமே வினைத்திறனான உளவளத்துணைச் செயற்பாட்டை அவர்களால் மேற்கொள்ள முடியும். அத்துடன் இமாம்களுக்குத் தேவையான ஆலோசனைகளும் ஒத்தாசையும் சமூகத்திலுள்ள தொழில்முறை உளவளத்துணையாளர்களின் மூலம் வழங்கப்படுமிடத்து தாம் வாழும் சமூக மக்களின் உளவியல் ரீதியான பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான பயனுள்ள பல சேவைகளை அவர்களால் வழங்க முடியும்.

## References

Abdin S., (2014 December). Uḷavaḷathuṇai ōr aṟimukam [Counseling an Introduction]. *Kalpitiya Voice*. http://www.kalpitiyavoice.com/2014/12/counseling-introduction.html

Abu- Ras, Wahiba., Gheith A., Cournos F., (2008). The Imam's Role in Mental Health Promotion: A Study at 22 Mosques in New York City's Muslim Community. *Journal of Muslim Mental Health 3*(2), 155-176. doi: 10.1080/15564900802487576

Al-Hibry A., (1996). The Muslim Perspective on the Clergy-Penitent Privilege. *Loyola of Los Angeles Law Review, 29*(4), 1723-1732. https://digitalcommons.lmu.edu/llr/vol29/iss4/33

Ali O.M., Milstein G., & Marzuk P.M., (2005). The Imam's Role in Meeting the Counseling Needs of Muslim Communities in the United States. *Psychiatric Services 56*(2), 202-205. doi: 10.1176/appi.ps.56.2.202

Al-Krenawi, A., (1995). *A study of dual use of modern and traditional mental health systems by the Bedouin of the Negev* (Doctoral dissertation, University of Toronto, Toronto, Ontario, Canada). TSpace Repository. http://hdl.handle.net/,

Al-Krenawi A. (2016). The role of the mosque and its relevance to social work. *International Social Work, 59*(3), 359-367. https://doi.org/10.1177%2F0020872815626997

Bate, S.P., Robert, G. (2002). Knowledge management and communities of practice in the private sector: lessons for modernizing the National Health Service in England and Wales. *Public Administration 80*(4), 643 – 663. doi: 10.1111/1467-9299.00322

Damian S., (2005). *Ulavala Thunai* [Counselling] (2nd ed.). Jaffna: Amathi Veliyeedu. https://noolaham.net/project/156/15556/ஹ15556.pdf

Haddad Y.Y., Lummis A.T. (1987). *Islamic Values in the United States: A Comparative Study*. New York: Oxford University Press.

Haque A., Kamil, N. (2012). Islam, Muslims and Mental Health. In S. Ahmed, & M. M. Amer (Eds.), *Counselling Muslims: Handbook of Mental Health Issues and Interventions*. New York: Routledge.

Haque A. (2004). Religion and mental health: The case of American Muslims. *Journal of Religion and Health, 43*(1), 45-58. https://doi.org/10.1023/B:JORH.0000009755.25256.71

Hummer R.A., Rogers, R.G., Nam, C.B., & Ellison, C.G. (1999). Religious involvement and U.S. adult mortality. *Demography, 36*(2), 273-85. https://doi.org/10.2307/2648114

Isgandarova N. (2011). The Concept of Effective Islamic Spiritual Care. *The Journal of Rotterdam Islamic and Social Sciences, 2*(1), 1-17. doi: 10.2478/jriss-2013-0021.

Isgandarova N. (2013). The Crescent of compassionate engagement: Theory and practice of Islamic spiritual care. In Daniel S. Schipani & Society for Intercultural Pastoral Care and Counselling (Eds.), *Multifaith views in spiritual care*. Pandora Press.

Isgandarova N. (2014). The Evolution of Islamic Spiritual Care and Counseling in Ontario in the Context of the College of Registered Psychotherapists and Registered Mental Health Therapists of Ontario. *Journal of Psychology & Psychotherapy, 4*(3), 1-6. doi:10.4172/2161-0487.1000143

Leavey, G., Loewenthal K.M., & King, M.B. (2007). Challenges to sanctuary: The clergy as a resource for mental health care in the community. *Social Science & Medicine 65*(3), 548- 559. doi: 10.1016/j.socscimed. 2007.03.050

Matthews D., McCullough M., Larson D.B., Koenig H., Swyers J.P., & Milano, M. (1998). Religious commitment and health status: A review of the research and implications for family medicine. *Archives of family medicine, 7*(2), 118-24. doi:10.1001/ARCHFAMI.7.2.118

McLeod, John. (2009). *An Introduction to Counselling* (4th ed). Maidenhead: Open University Press.

Mohit, A. (2001). Mental health and psychiatry in the Middle East: Historical Development. *Eastern Mediterranean health journal, 7*(3), 336-347. https://pubmed.ncbi.nlm.nih.gov/12690751/

Muhammad O.B., (1996). *The Role of Mosque*. London: Al-Muhajiroun Publications.

Naseredden S., (2015). An analysis of Phoenix Metro Imams and their roles in serving the counseling needs of Muslims. *SlideShare*. https://www2.slideshare.net/

Saleem, Saleem. (2015). *Muslim Mental Health Service Providers Reflect on Working with Muslim Women* (Master's thesis, University of Saskatchewan, Saskatoon). Harvest. http://hdl.handle.net/10388/ETD-2015- 04-2049

Shah K., & McGuinness E., (2011). Muslim Mental Health Awareness: Exploring the Needs of the Community. Proceedings of 21st Annual The MHS Conference on *Contemporary The MHS in Mental Health Services*, Adelaide, South Australia. 6-9 September 2011. http://kahuitukaha.co.nz/wp-content/uploads/2019/06/Muslim-MH-Awareness.pdf

Shah M., Sadaratullah, Al-Azhari M.R.K., Rahman S., Fayaz M., Khan, K. (2016). Effects, Need and Importance of Research Art in Islamic Teachings. *Journal of Applied Environmental and Biological Sciences, 6*(10), 154-156. http://www.textroad.com/

Siddiqui S. (2004). *A professional Guide for Canadian Imams*. Winnipeg, Canada: Islamic Social Services Association Inc.

Sulmasy D.P. (1999). Is medicine a spiritual practice? *Academic Medicine, 74*(9), 1002-1005. doi: 10.1097/00001888-199909000-00012

Taylor R.J., Ellison C.G., Chatters L.M., Levin J.S., & Lincoln K.D. (2000). Mental Health Services in Faith Communities: The Role of Clergy in Black Churches. *Social Work 45*(1), 73-87. doi:10.1093/sw/45.1.73.

Tedeschi R.G. (1999). Violence transformed: Posttraumatic growth in survivors and their societies. *Aggression and Violent Behavior, 4*(3), 319-341. https://doi.org/10.1016/S1359-1789(98)